ஸ்ரீ சுபகிருது ஆண்டு (சித்திரை 23) 2022 மே 06-ம் தேதி வெள்ளிக்கிழமைநண்பகல் 12.05 மணிக்கு
திருவாரூர்நகர்மன்றசாதரணக்கூட்டம்நடைபெறும்அப்பொழுது
கீழ்கண்டபொருள்கள்பரிசீலனைக்குஎடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா, நகரமன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| **பொருள் எண்01**<br>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br><br>தமிழகத்தில் ஐந்து முறை சிறப்பான ஆட்சி தந்து தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்து தமிழர்களை தலைநிமிர்ந்து வாழ வைத்த மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜுன் திங்கள் 3-ம் நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என சட்டசபையில் அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் திருவாரூர் நகரமன்றத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி தெரிவித்து கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>மாண்புமிகு தமிழக முதல்வர் மண்ணின் மைந்தர் அரசின் இந்துசமய அறநிலைய துறை சார்பில் முதல்வரின் ஊரான திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் 10.00கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களுக்கும் திருவாரூர் தேரோடும் வீதிகளில் உள்ள மின்கம்பிகள் இனி புதைவட மின்கம்பிகளாக மாற்றப்படும் என அறிவித்த மாண்புமிகு மின்சார துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்களுக்கும் இதனை கோரிக்கையாக வைத்து பெற்று தந்த திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பூண்டி.கே.கலைவாணன் அவர்களுக்கும் நகரமன்றத்தின் சார்பில் நன்றியினை தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.<br>திருவாரூர் நகராட்சி பராமரிப்பில் உள்ள கௌரிசாமி நினைவு நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் பள்ளிக்கு எதிர்புறம் அமைந்துள்ளது. அம்மைதானம் உள் விளையாட்டு அரங்கமாக தற்போது பயன்பாட்டில் உள்ளதை பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களின் கோரிக்கையின் படி பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்தி பள்ளிக்கு உரிய விளையாட்டு மைதானத்தை தனி நபர்கள் (வெளி நபர்கள்) ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி பள்ளி நிர்வாகத்திடம் உடனடியாக ஒப்படைப்பது என்று நகரமன்ற தலைவர் மற்றும் 13-வது வார்டு உறுப்பினர் திருமதி.உமாமகேஸ்வரி ஆகியோர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன்.<br>இந்நகராட்சிகென தனி நில அளவையர் இல்லாததால் பொதுமக்களுக்கு TSLR நகல் வழங்குதல், நில அளவீடு செய்தல் மற்றும் நகராட்சி பராமரிப்பில் உள்ள பூங்காக்கள் , கட்டிடங்கள் அளவீடு செய்தல் நகராட்சி பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அளந்து குறியீடு செய்தல் போன்ற பணிகள் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. எனவே நகராட்சி பணிகள் தொய்வின்றி நடைபெற ஏதுவான திருவாரூர் நகராட்சிகென தனி நிலஅளவையர் நியமிக்க தீர்மானம் நிறைவேற்ற கேட்டுக்கொள்கிறேன். | 48)<br>தீர்மானிக்கப்பட்டது. நகராட்சிக்கு தனி நில அளவையர் நியமானம் செய்தி உதவி இயக்குநர் நில அளவையர் துறை திருவாரூர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப அனுமதிக்கப்படு கிறது. |
| பொருள் எண் 2<br>நகரமன்ற துணைத்தலைவர் திருமதி.ச.அகிலா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.<br>நகராட்சி பள்ளிகள் அனைத்தையும் மேம்படுத்தி பள்ளிகளின் தரத்தினை உயர்த்துதல்,வாசன் நகர் சாய்பாபா கோவில் அருகிலும் வாசன் நகரில் 9 வது குறுக்கு தெருவிலும் (9th Cross) கல்வெர்ட் அமைத்து தரவும் தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன். | 49)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 3<br>01 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.கலியபெருமாள் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>கப்பல்நகர் - பெரியார்தெரு பகுதியில் அமையப்பெற்றுள்ள மயானத்தில், பொதுமக்கள் சிரமம் தவிர்க்க போர் செட் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தியும், இராமநாதன் நகர் ஹவுசிங் யூனிட் - K.P.A நகர் V.S.R நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை அடிக்கடி நிரம்பி வழிந்தோடி பொது மக்களை சிரமப்படுவதை தவிர்க்க, அதனை முறையாக சரி செய்து ஹெவி பவர் மோட்டார் அமைத்து இரைத்து அப்புரப்படுத்தவும், மழைக்காலத்திற்கு முன்பே எனது வார்டில் ஆய்வு செய்து மழை தண்ணீர் தேங்காத வண்ணம் நடவடிக்கை எடுத்தும் தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன். | 50)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 4<br>02 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.கே.மலர்விழி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>கீழகாவாதுகுடி சாலை பழுதடைந்துள்ளதை சரி செய்து தருமாறும் E.V.S நகர் பகுதியில் பொது குடிநீர் குழாய் ஏற்படுத்தி தருமாறும், E.V.S நகர் பூங்கா மேம்படுத்தி தேங்கியுள்ள குப்பைகளை அகற்றிடவும் தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன் | 51)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 5<br>03 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.எம்.கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**வடக்கு கொத்த தெரு, தைக்கால் மெயின் ரோடு சாலை மற்றும் கீழ கொத்த தெரு காளியம்மன் கோவில் எதிரில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆதலால் வடிகால் வாய்கால்களை புதுப்பித்து தருமாறும், கீழகொத்த தெரு பின்புறம் 300 மீ நீளமுள்ள வடிகால் மிகவும் மோசமான நிலையில் தூர்ந்துபோய் இருக்கிறது அதை தூர்வாரி புதிதாக கட்டிக் கொடுக்குமாறும், கொள்ளிடம் கூட்டு குடிநீர் எங்கள் பகுதி கடைநிலை பகுதியாக உள்ளதால் நீர்வரத்து குறைவாகவே இருக்கிறது. கீழகொத்த தெரு, வடக்கு கொத்த தெரு, நடு கொத்த தெருக்களில் குடிநீர் வருவதே இல்லை. ஆதலால் போதுமான அளவு தடையின்றி குடிநீர் கிடைக்க வழி செய்யுமாறும், பொது** | 52)<br>தீர்மானிக்கப்பட்டது |

Created with
PDFBear.com

| | |
|---|---|
| **சுடுகாட்டில் மதில் சுவர் முற்றிலும் இடிந்து விட்டது அதனை சுற்றிலும் மதில் சுவர் அமைத்தும், மினிபவர் பம்பு அமைத்து தரும்படியும், கொடிக்கால் பாளையம் மேலத்தெருவில் உள்ள நகராட்சி பூங்காவில் கருவேல மரங்கள் மண்டியுள்ளது மற்றும் பாம்பு , விஷ பூச்சிகள் அதிகமாக இருப்பதால் பக்கத்தில் குடியிருக்கும் மக்களுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது . அதனை சுத்தம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படியும்** தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | |
| பொருள் எண் 6<br>04 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஜ.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>எனது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் நகராட்சி சார்பாக Stainless Steel பெயர் பலகை வைத்து தருமாறும், சாமந்தாம்பாளையம் சமுதாயக்கூடம் மிகவும் பழுதடைந்துள்ளது, அதனை புதுப்பித்து தருமாறும், சரம் ஒப்பந்தத்தை மேலும் நீட்டிக்காமல் புதிய ஒப்பந்தத்தை உடன் ஏற்படுத்தி வரும் காலங்களில் சுகாதாரப் பணி சிறப்பாக செயல்படவும், நகரமன்ற கூட்ட வருகைக்காக வழங்க கூடிய அமர்வு படி ரூ.600/- போதுமானதாக இல்லை . எனவே, நகரமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அமர்வு படியை உயர்த்தி வழங்கிட தீர்மானம் நிறைவேற்றி தருமாறு நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 53)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 7<br>05 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பி.சகிலாபானு அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>எனது வார்டில் உள்ள தெற்கு தெரு , கொடிக்கால்பாளையம் , முஸ்லீம் தவ்ஹீத் ஜமாத்திற்கு சொந்தமான பள்ளிவாசல் இயங்கி வருகிறது. அது பொது பாதை சந்தில் அமைந்துள்ளது. அப்பகுதிக்கு சிமென்ட் சாலை அமைத்து தருமாறும் , ராமகே கொடிக்கால் தெரு எம்.எம்.ஜ நகர் மற்றும் விடுப்பட்டுள்ள சுமார் 25 இடங்களில் மின்விளக்கு அமைத்து தருமாறும் , 5வது வார்டு பகுதியில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டினை சரிசெய்திடவும் கூடுதலாக தூய்மை பணியாளர்களை அனுப்பி வைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 54)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 8<br>06 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பாஜஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ஆசாத் நகர் வாய்கால் தற்போது மழைநீர் வடிகாலாக பயன்படுத்தப்படுகிறது, அந்த வாய்காலை தூர்வாரி தருமாறும், ராமகே ரோட்டில் உள்ள பி சேனல் வாய்கால் திருவாரூரில் கால்வாசி மழைநீர் வடிகாலாகவும் 20 குளங்களுக்கு மேல் குளிப்பதற்கு தண்ணீர் வரும் வாய்காலாகவும் 20 ஏக்கருக்கு மேல் உள்ள நிலத்திற்கு பாசன வாய்காலாகவும் பயன்பாட்டில் இருந்தது. 8 வருட காலமாக சரியான முறையில் தூர்வாரப்படாததால் தற்போது சாக்கடை தண்ணீர் மட்டுமே வாய்காலில் உள்ளது இந்த வாய்காலை சீரமைத்து தரும்படியும், ஆண்டித்தோப்பில் மினிபவர் பம்பு இயங்காமல் பழுதடைந்து உள்ளது அதை புதுப்பித்து தரும்படியும், ராமகே ரோடு கேட்டுதெருவில் மினிபவர் பம்பு அல்லது கொள்ளிடம் கூட்டு குடிநீர் இதில் ஏதோ ஒன்று அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 55)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 9<br>10 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஆர்.தெட்சிணாமூர்த்தி, அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>அருள்மிகு தியாகராஜசாமி திருக்கோவில் சன்னதி தெருவில் உள்ள திரு. ஆருரான் திருமண மண்டபத்தின் தெற்கு பகுதியில் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் குளியல் அறையுடன் கூடிய கழிவறை கட்டி தரவும், வடக்கு மடவிளாகம் கல்தேர் முன்புறமுள்ள குடி நீர் தொட்டி கடந்த 2001 -ம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்தது . அது 40 அடி போராக இருப்பதால் கோடை காலத்தில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. மேற்படி குடிநீர் தேக்க தொட்டியினை புதுப்பித்தும் புதிய ஆழ்குழாய் போர் அமைத்தும், பிடாரிக் கோவில் தெருவில் மடம் அருகில் மினி பவர் பம்பு அமைத்து தரவும், வடக்கு வீதியில் BSNL டவர் இருக்கும் பகுதியில் மினிபவர் பம்பு அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 56)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 10<br>12 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. சி.பிரகாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>கீழ சன்னதி தெருவில் இருபக்கமும் மழைநீர் வடிகால் அமைத்து தர தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன். | 57)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண்** 11<br>14 வது வார்டு உறுப்பினர் திரு.த.செந்தில் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்<br>கமலாலயம் வடகரையில் உள்ள கமலாலய குளத்**தின்**வடிகாலை சரி செய்து குளத்**தின்** தண்ணீர் bfடாமல் பாதுகாக்க தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக்கொள்கிறேன் | 58)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண்** 12<br>15 வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.மூர்த்தி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்<br>திலகர் 2வது தெருவில் உள்ள 4 மின்கம்பம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதனை சரி செய்திடவும் மின்விசை மோட்டர் சரி செய்திடவும் , புதியதாக சமுதாய கூடம் அமைத்து தருதல், காமராஜர் தெருவில் கழிப்பிடத்தை பழுதுபார்த்தல் , ஜெகஜீவன் ராம் தெருவில் மயான சாலை அமைத்து தருதல், சாம்பசிவ நகரில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்கு பொருத்துதல், ஐயனார் குளம் கீழ்புரத்தில் மின்விளக்கு அமைத்தல், மற்றும் தியாகபெருமாநல்லூரிலிருந்து திலகர் 2வது தெருவரை உள்ள விஜயபுரம் வாய்க்காளை துர்வாரி தரவும் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 59)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண்** 13<br>**16 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. எஸ்.என்.அசோகன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்**<br>16 வது வார்டு காட்டுக்காரத் தெரு தார்சாலைக்கும் சபாபதி ஆற்றங்கரைத் தெரு சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த மழைக்காலத்தில் மழைநீர் தேங்கி கிட்டத்தட்ட பத்து வீடுகள் நீரில் மூழ்கி விட்டன. அதனால் காட்டுக்காரத் தெருவிலிருந்து திருமஞ்சனவீதி | 60)<br>தீர்மானிக்கப்பட்டது |

Created with
PDFBear.com

| | |
|---|---|
| சிறு பாலத்திற்கு செல்லும் பகுதியை தூர்வாரி மழைநீர் வடிகால் கட்டித்தருமாறும், சபாபதி ஆற்றங்கரைத் தெரு சாலை செப்பனிட்டு 100 மீட்டர் அளவில் ஆற்றங்கரைப் பகுதியில் Retaing Wall கட்டித்தருமாறும் , முக்தி விநாயகர் கோவில் தெரு, பெருமாள் கோவில் சன்னதித் தெரு, சபாபதி தெரு பகுதிகளில் சிறுமின் விசைக் குடிநீர்க்குழாய்கள் அமைத்து தருமாறும், முக்தி விநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்து தருமாறும், பெருமாள் கோவில் மேல வீதியில் உள்ள ஐந்து சந்து பகுதிகளுக்கு தார் சாலைகள் அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் | |
| பொருள் எண் 14<br>17 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>தீயணைப்பு நிலையம் மற்றும் பழைய அரசு மருத்துவமனை ஒட்டியுள்ள சாலை மிகவும் தாழ்வாக உள்ளதால், மழை நீர் அதிக அளவில் தேங்கி சுகாதார சீர்க்கேடு ஏற்படுகிறது. உடனடியாக உயர்மட்ட சாலை அமைத்து தருமாறும், பெருமாள் கீழவீதி மற்றும் முடுக்கு தெரு மழைநீர்வடிகால் தூர்வாரி அது வடியும் இடமான சூரியன் குளத்தெரு வடிகாலையும் தூர்வார வேண்டியும் , பாதாள சாக்கடை தொட்டிகளில் தேங்கியுள்ள மண் மற்றும் அடியில் தங்கியுள்ள கழிவுகளை இயந்திரம் கொண்டும் 17 வது வார்டில் உள்ள அனைத்து தொட்டிகளையும் சுத்தம் செய்து தருமாறும், மடப்புரம்பாட்டை மழைநீர் வடிகாலை கடைசி பகுதிவரை தூர்வாரி தருமாறும் , சித்தி விநாயகர் கோவில் செட்டிகுளம் நீராதாரம் இல்லாமல் உள்ளது. அந்த குளத்திற்கு நீர் வரும் பாதையை சரி செய்து தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 61)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 15<br>18 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.இரா.ஆசைமணி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>திருவாரூர் திருமஞ்சன வீதியில் பாதாள சாக்கடை கழிவு நீர் வெளியேற்றும் தொட்டி உள்ளது. அதன் சுற்று சுவர் மிக தாழ்வாக உள்ளதால் துர்நாற்றம் அப்பகுதியில் வசிக்கும் மக்களை மிகவும் பாதிக்கிறது. எனவே, சுற்றுச்சுவரின் உயரத்தை உடனடியாக உயர்த்திட தீர்மானம் நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன். | 62)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 16<br>21 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. இரா.சங்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>, 21 வது வார்டு சூ மேக்கர் காலணியில் பழுதடைந்த மினி பவர் பம்பு சரி செய்ய வேண்டியும், செட்டியார் காலணியில் புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல், இராணுவ நகரில் குடிநீர் சுத்தமாக வரவில்லை, அதை சரி செய்து தருமாறும், மருதபட்டினம் மாரியம்மன் கோவில் செல்லும் சாலை அமைத்து தருமாறும் எங்கள் பகுதியில் குடிசை வீடு அதிகமாக இருப்பதால் அதை கான்கீரிட் வீடாக மாற்றி தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் | 63)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 17<br>22 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ரெ.ரேவதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>**தர்மகோவில் தெரு பொதுக்கழிப்பிடம் மற்றும் இராணுவ நகரில் உள்ள பொதுக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை புதுப்பித்து தருமாறும், தோட்டத்து தெரு , தியாகி சின்னசாமி தெரு, சாரங்கபாணி தெரு மற்றும் மருதப்பட்டிணம் மெயின் ரோட்டில் உள்ள கை பம்பு இயங்காமல் உள்ளது, அதனை சரி செய்து தருமாறும், மற்றும் நான்கு இடங்களில் உள்ள மார்ட் 2 பம்புகளில் நீர்மட்டம் குறைந்து குடிநீர் வருவதில்லைஎனவே, புதிய குடிநீர் குழாய் அமைத்து**தருமாறும் தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் | 64)<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் 18**<br>**23 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. ச.கருணாநிதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்**<br>**கட்டளை தோப்பு ரேஷன் கடை அருகில் குடிநீர் தொட்டியுடன் கூடிய சிறு மின் விசை பம்பு , ஆலடி மாரியம்மன் கோவில் குறுக்கு தெருவில் -குடிநீர் தொட்டியுடன் கூடிய சிறு மின் விசை பம்பு, அமைத்து தருமாறும் செங்கமேட்டு தெருவில் இணைக்கும் வாய்க்காலில் சிறு பாலம் மிகவும் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அதனை இடித்து விட்டு புதிய பாலம் கட்டி தரவும் தீர்மானம் நிறைவேற்றி கேட்டுக்கொள்கிறேன்.** | 65)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 19<br>24 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. **ஆர்.சின்ன**வீரன்அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>24 வது வார்டு வண்டிக்கார தெருவில் உள்ள பொது கழிப்பிடம் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை இடித்துவிட்டு புதிய பொதுக்கழிப்பிடம் கட்டித் தருமாறும் , கொடிக்கால் தெரு சந்திப்பு அருகில் புதிதாக மின்கம்பம் அமைத்து தருமாறும் , 24 வது வார்டில் அனைத்து தெருக்களிலும் மழைநீர் வடிகால்கள் தூர்வாரி தருமாறும், தியாகராஜபுர தெருவில் புதிய மழைநீர் வடிகால் அமைத்து தருமாறும், நாகை பைபாஸ் சாலையின் அருகில் உள்ள மயானம் பழுதடைந்து உள்ளதால் அதனை பழுதுப்பார்த்து சுற்றுச்சுவர் அமைத்து தருமாறும், வண்டிக்கார தெருவில் உடற்பயிற்சி கருவிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடம் அமைத்திடவும் தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 66)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 20<br>25வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெ. அய்யனார், அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>ரயில்வே கீழ்பாலம் மேற்புறமுள்ள அண்ணா சாலையில் K.V.S பாத்திரக்கடை வீதியில் கட்டப்பட்டுள்ள மழை நீர் வடிகால் தெற்கில் இருந்து வடக்கில் வாட்டம் வைத்து கட்டாமல் ஏற்கனவே வடக்கில் இருந்து தெற்காக வாட்டம் வைத்து கட்டப்பட்டுள்ளது. இதனால் மழைக்காலங்களில் பெய்யும் மழை நீர் கடைத்தெரு பகுதிகளில் இருந்து நேரடியாக k.v.s பாத்திரக்கடை வீதியில் குளம் போல் தேங்கி வடிவதற்கு நீண்ட நேரமாகிவிடுவதால் போக்குவரத்து தடைப்படுகிறது. எனவே, பழைய மழை நீர்வடிகாலை அகற்றி விட்டு புதிய மழை நீர் வடிகால் அமைத்து தருமாறும், மழைக்காலங்களில்ஏற்படும்பாதிப்பைதடுக்க முன் கூட்டியே புள்ள தெரு வாய்க்கால், பழைய தஞ்சை சாலை வாய்க்கால் முழுவதையும் தூர்வாரி தருமாறும், விஜயபுரம் அரசு தாய் சேய் நல மருத்துவமனை எதிர்புறம் உள்ள பழைய கல்வெர்ட்டை புதிய கல்வெர்ட் அமைத்திட தீர்மானம் நிறைவேற்றி தர | 67)<br>தீர்மானிக்கப்பட்டது |

Created with
PDFBear.com

| | |
|---|---|
| நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | |
| பொருள் எண் 21<br>26வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>பெரியமில் தெரு பாய் பிளாட் பகுதியில் இடது பக்கம் உள்ள 1 வது, 2 வது , 3வது மற்றும் 5 வது சந்து, 5வது சந்தின் எதிர்புறம் உள்ள சாலை பாய் பிளாட்டின் கடைசியில் ரயில் P.W ஆபிஸ் அருகில் தெற்கு வடக்காக உள்ள சாலை 20 வருடங்களாக மண் சாலைகளாக உள்ளது. இதனை சிமெண்ட அல்லது தார் சாலையாக மாற்றித் தருமாறும், பெரியமில் BSNL ஆபிஸ் பின்புறமுள்ள பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை புதிய சாலைகளாக மாற்றி தருமாறும், பெரிமில் தெரு ரயில்வே P.W ஆபிஸிலிருந்து கீழ்பாலம் வரை வாய்காளை தூர்வாரி மழைநீர் தேங்காமல் வடிய வழி செய்து தருமாறும், பெரிய மில் தெரு முதல் ஐ. பி கோவில் தெரு இணைப்பு சாலையை காண்கிரிட் சுவர் அமைத்து சாலை வசதி அமைத்தும் பெரியமில் தெருவில் விடுபட்டுள்ள அனைத்து சாலைகளிலும் மழைநீர் வடிகால் அமைத்திடவு தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 68)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 22<br>27வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.தினேஷ்குமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்<br>KTR எஸ்டேட் முதல் ஐ பி கோவில் நடுத்தெரு, ஐ பி கோவில் தெற்கு தெரு வழியாக ஆத்தாக்குளம் வரை மழைநீர் வடிகாலை வசதி ஏற்படுத்தி தருமாறும், மேலும் ஆத்தாக்குளத்தில் இருந்து வாளவாய்க்கால் வரை மழைநீர் வடிகால் அமைத்து தருமாறும், ஐ பி கோவில் மேலத்தெரு மற்றும் ஐபி கோவில் தெற்கு தெரு மற்றம் உபசந்து தார்சாலை மிகவும் பழுது அடைந்து உள்ளதால் புதிய தார்சாலை அமைத்து தருமாறும், 27 வது வார்டு பகுதியில் உள்ள தெருக்களுக்கு வழிக்காட்டு பலகை அமைத்து தருமாறும், KTR எஸ்டேட் தெருவில் பூங்காவிற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது, அந்த இடத்தில் பூங்கா அமைத்து தீர்மானம் நிறைவேற்றி தர நகரமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். | 69)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் 23<br>இந்நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் ஏப்ரல் 2022-ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் பதிவு செய்யலாம். | 70)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண்24<br>இந்நகராட்சிக்கு தேவையான பதிவேடுகள் , கணினி ரசீதுகள் , டோனர், A 4 மற்றும் Legal size papper , மற்றும் இதரப் பொருட்களை கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் திருச்சி நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1000000/- (10.00 இலட்சம்) க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் திருச்சி நிறுவனத்தில் வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். | 71)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 25<br>திருவாரூர் நகரம் வார்டு 3 , பிளாக் 18 , நகரளவு எண் 617 மற்றும் 618/1 , தஞ்சை சாலை, சந்தைப்பேட்டையில் 13035 சதுர அடி அளவுள்ள நிலம் தஞ்சாவூர் விற்பனை குழுவிற்கு அரசாணை எண் 488 வேளாண்மை (வே.வி 2) துறை நாள் 12.11.99-ன் படியும் இந்நகரமன்ற தீர்மானம் எண் 1129 நாள் 25.11.99.ன் படியும் 28.10.2000 முதல் உழவர் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2018-ம் ஆண்டு கஜா புயலினால் உழவர் சந்தையின் மேற்கூரைகள் சேதமடைந்து இருப்பதாலும் மேற்படி இடம் மிகதாழ்வான பகுதியாக இருப்பதால் பருவமழை காலங்களில் மழைநீர் தேங்கியிருப்பதாலும் உழவர் சந்தை சரியாக செயல்பட இயலவில்லை என்பதாலும் மாண்புமிகு உழவர் மற்றும் வேளாண் நலத்துறை அமைச்சர் அவர்களின் 20.03.2022-ம் தேதிய சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்புக்கு இணங்க திருவாரூர் உழவர் சந்தையினை விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஏதுவாக மாற்று இடம் வழங்ககோரி வேளாண் துணை இயக்குநர் திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண் இ/106/2018 நாள் 25.04.2022-ன் படி கோரப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க திருவாரூர் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பயன்பாடற்ற நிலையில் உள்ள சைக்கிள் நிறுத்தம் காலி இடத்தினை வாடகை அடிப்படையில் வழங்குவதை குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>அலுவலக குறிப்பு<br>பழைய பேருந்து நிலைய சைக்கள் நிறுத்துமிட காலியிடம் மன்றத்தால் தேர்வு செய்யப்படும் நிலையில் அரசாணை நிலை எண் 25 நாள் 25.02.2000 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படி நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை குத்தகை விட அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பிட மன்றம் தீர்மானிக்கலாம்.<br>ந.க.எண் 976/2022/அ5 | 72)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 26<br>திருவாரூர் நகராட்சி விஜயபுரம் வட்டம் தியாகபெருமாநல்லூர் கிராமத்தில் நகரளவு எண் வார்டு 3, பிளாக் -ல் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் உள்ள குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் 13.03.2022-ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.29862/- வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட தொகை ரூ.29862/- குத்தகை இனங்கள் ஏலம் விட தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட தொகை வழங்கியதை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்<br>ந.க.எண் 2506/2017/அ1 | 73)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 27<br>திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறம் உள்ள பழுதடைந்து கிடக்கும் | 74)<br>அலுவலக குறிப்பு |

Created with
PDFBear.com

குப்பைகளை அகற்றும் Bin – பெட்டிகள் மற்றும் பழைய நகராட்சி அலுவலக அரண்மனை கட்டிடத்தில் உள்ள ”E” Wastes – களை அப்புறப்படுத்துவதற்கு பொது ஏலம் கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அனுமதி வழங்கலாம்.

.ந.க.எண். /2022/எச்1

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 28

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022 நடைபெறுவதனை முன்னிட்டு நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்றக் கூடத்தில் UPVCயினால் ஆன ஜன்னல்கள், கதவுகள் பொருத்துதல், பாலிமார்பில் ஷீட் ஒட்டுதல், மின் வசதிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்களின் விவரம் | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 783307/- | திரு.எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 793376/- | 1.29 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | | திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 782428/- | 0.11 % மதிப்பீட்டைவிட குறைவு. |

மேற்படி பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.11% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண். /2022/இ1

75) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் 29

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022னை முன்னிட்டு திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவருக்கு ஒதுக்கப்பட்ட அறையினை புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர்களின் விவரம் | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | மதிப்பீட்டு விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 428305/- | திரு.எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 434648/- | 1.48 % மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | | திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 427518/- | 0.18 % மதிப்பீட்டைவிட குறைவு. |

மேற்படி பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண். /2022/இ1

76) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்30

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் பரிந்துரைச் செய்யப்பட்ட 19 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் அவர்களின் ந.க.எண்.6297/2021/அ5 நாள் 09.03.2022 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 13.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணிகளின் விவரம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ள தொகை | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 குருஜி நகரில் மழைநீர் வடிகால் கட்டுதல். | 648428 | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 647940 | 0.08% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 652160 | 0.58% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

77) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

Created with
PDFBear.com

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | வார்டு எண்.12 காந்தி நகர் - திருவள்ளுவர் நகர் இணைக்கும் விதமாக கல்செட்டு கட்டுதல். | 119356 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 119229 | 0.11% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 120529 | 0.98% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 3. | வார்டு எண்.3 தெற்கு கொத்தத் தெருவில் கல்வெட்டு கட்டுதல். | 90653 | எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 90544 | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர் | 91744 | 1.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 4. | வார்டு எண்.29 சிவன் கோவில் தெருவில் கல்வெட்டு கட்டுதல். | 106709 | எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 106583 | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர் | 107914 | 1.13% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 5. | வார்டு எண்.24 மாரியம்மன் கோவில் தெருவில் கல்வெட்டு கட்டுதல். | 90653 | எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 90540 | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர் | 91744 | 1.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 6. | வார்டு எண்.22 மருதப்பட்டினம் உப சந்து பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 327473 | எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 327289 | 0.06% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எல்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருவாரூர் | 327813 | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 7. | வார்டு எண்.12 அப்பாபிள்ளை தெருவில் கல்வெட்டு கட்டுதல். | 100115 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 99983 | 0.13% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 101400 | 1.28% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 8 | வார்டு எண்.19 ருத்திரகோடிஸ்வரர் தெருவீல் சிமெண்ட் சாலை அமைத்தல். | 348605 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 348477 | 0.04% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 353067 | 1.28% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| 9. | வார்டு எண்.15 திலகர் 2வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 382157 | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 384602 | 0.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 381931 | 0.06% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| 10. | வார்டு எண்.28 நார்சிங்கம்பேட்டையில் சிமெண்ட சாலை அமைக்கும் பணி. | 223310 | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 224730 | 0.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் | | |
| | | | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 223184 | 0.06% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| 11. | வார்டு எண்.1 நாலுக்கால்மண்டபத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | 491526 | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 491333 | 0.04% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு | | |
| | | | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 497768 | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை | | |

Created with
PDFBear.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | விட அதிகம் |
| 12. | வார்டு எண்.18 நகரத்தார் மடத்திற்கு எதில் சந்தில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 546844 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 553844 | 1.28 சதவிகிதம் மதிப்பீட்டை விடஅதிகம் |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 546650 | 0.04% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 13. | வார்டு எண்.24 வண்டிக்காரத் தெருவில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | பி.சம்பத், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242444 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245695 | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 14. | வார்டு எண்.20 சீராத்தோப்புத் தெருவில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242444 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245695 | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 15. | வார்டு எண்.4 சாமந்தான்பாளையத்தில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245991 | 1.39% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242449 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 16. | வார்டு எண்.19 குளுந்தான் குளம் தென்கரையில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242444 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245695 | 1.27% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| 17. | வார்டு எண்.18 அம்மாத்தோப்பு தெருவில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245991 | 1.39% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| | | | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242449 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 18. | வார்டு எண்.20 அழகிரி காலனியில் மினி பவர் பம்வு (1000லி கொள்ளளவு கொண்ட தொட்டியுடன்) அமைத்தல். | 242614 | ஆர்.பரிமளா, ஒப்பந்ததாரர், திருவாரூர். | 242444 | 0.07% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | எஸ்.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 245840 | 1.33% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 19. | வார்டு எண்.23 கிடாரங்கொண்டான் திரு.வி.க அரசு கலைக் கல்லூரி எதிரில் பயணியர் நிழற்குடை கட்டுதல். | 2091663 | எஸ்.தணிகாசலம், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 2118855 | 1.30% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | கே.செந்தில் குமார், ஒப்பந்ததாரர், திருவாரூர். | 2089781 | 0.09% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்காணும் திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு இணக்கப்பட்டியலின்படி இணக்கம் செய்ப்பட்டதில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்காணும் திட்டப்பணிக்கு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.117/2022/இ1

Created with
PDFBear.com

| | |
|---|---|
| பொருள் எண்31<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்காக ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள இந்தியா மார்க் - II பம்புகள், சிறுமின் விசைப் பம்புகள், தலைமை நிரேற்று நிலையத்திலுள்ள ஆழ்துளைநீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கங்களில் அமைந்துள்ள மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சீர்செய்து பொதுமக்களை பாதிக்காத வகையில் சீரான குடிநீர் வழங்கிட தயார் செய்ப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 846/2022/இ1 | 78)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்32<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் மேற்கொண்டு வரும் பிரதானக்குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது மற்றும் உடைப்புகளை சீர்செய்து சீரான குடிநீர் விநியோகம் வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட பணியினை மேற்கோள்ள ஆகும் மதிப்பீட்டுத்தொகையினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 847/2022/இ1 | 79)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 33<br>திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட ஏழு பள்ளிகளையும் நகர்மன்ற தலைவர் அவர்களால் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டும் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் உத்தேச மதிப்பீடு ரூ.155.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளின் விவரம் பின்வருமாறு.<br>(table below) | 80)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | பள்ளிகளின் விபரம் | தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கொடிக்கால்பாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல். | 25.00 |
| | கொடிக்கால்பாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் வகுப்பறை கட்டிடங்கள் பராமரித்தல். | 15.00 |
| 2.. | கௌரிசாமி நினைவு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் வகுப்பறை கட்டிடம் பராமரித்தல். | 20.00 |
| 3. | விஜயபுரம். நகராட்சி நடுநிலைப்பள்ளியில் வகுப்பறை, சத்துணவு கூடம், கழிப்பறை பராமரித்தல் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள வகுப்பறைகட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல். | 25.00 |
| 4. | இராமகே நகராட்சி தொடக்கப்பள்ளியில் வகுப்பறை கட்டிடம் பராமரிப்பு மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல். | 20.00 |
| 5. | கே.டி.ஆர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் புதிதாக கூடுதல் வகுப்பறை கட்டுதல். | 25.00 |
| 6. | மடப்புரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பழுதடைந்த வகுப்பறை கட்டிடம் இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணி. | 15.00 |
| 7. | பாவாகோபால்சாமி நகராட்சி தொடக்கப்பள்ளி பராமரிப்பு பணிகள். | 10.00 |
| | **ஆகமொத்தம்** | **155.00** |

| | |
|---|---|
| மேற்காணும் பள்ளிகளுக்கு பராமரிப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 928/2022/இ1 | |
| பொருள் எண் 34<br>திருவாரூர் நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் 2022-23ஆம் ஆண்டிற்கு நடைபெறும் மற்றும் வரப்பெறவுள்ள திட்டப்பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, அரசின் திட்டச்சாதனைகள் மற்றும் பொதுவான இதரவகை விளம்பரங்களை விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள விளம்பரங்களுக்கான விளம்பரக் கட்டணத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. விளம்பரம் செய்யப்பட்டது தொடர்பாக வரப்பெறும் விளம்பரக் கட்டணத்தினை உரிய அலுவலர்களின் ஒப்புதல் பெற்று தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 767/2022/இ1 | 81)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

Created with
PDFBear.com

| | |
|---|---|
| பொருள் எண் 35<br>திருவாரூரில் ஓடம் போக்கி ஆற்றின் குறுக்கே மடப்புரம் சாலையினை கி.மீ.0/2ல் உயர்மட்ட பாலம் கட்டும் பணிகள் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் 27.08.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2021-22ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பாலம் திருவாரூர் நகராட்சியால் பராமரிக்கப்படும் மடப்புரம் சாலையில் அமைந்து உள்ளதால் அதனை நெடுஞ்சாலை துறைக்கு மாற்றம் செய்யப்பட்டபிறகே நிர்வாக அனுமதி வழங்கப்படும் என "அரசு முதன்மை செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்ப்பி2) துறை, சென்னை அவர்களால் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், மடப்புரம் சாலையினை நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைப்பு செய்திடவும் கோட்டபொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருவாரூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதனைத் தொடர்ந்து திருவாரூர் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள மடப்புரம் சாலையில் குடிநீர் விநியோக பகிர்மான மற்றும் பிரதான குழாய்கள் மற்றும் பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாய்கள் பாதிக்காத வகையில் செயல்படுத்திடவும் மற்றும் அவ்வப்போது ஏற்படும் குழாய்கசிவினை பழுது நீக்கம் செய்திட நகராட்சியின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற நிபந்தனைகளுடன் மற்றும் பணிமுழுமையாக முடிக்கப்படவுடன் நகராட்சிவசம் சாலையினை திரும்ப ஒப்படைப்பு செய்திட அறிவுறுத்தியும் நெடுஞ்சாலைத்துறைக்கு மடப்புரம் சாலையினை ஒப்படைப்பு செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>நெடுஞ்சாலை துறையிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தினை மன்றம் பார்வையிட்டு முடிவுசெய்யலாம்.<br>ந.க.எண். 786/2022/இ1 | 82)<br>நெடுஞ்சாலைத்துறை கடிதத்தின்படி மடப்புரம் பெருமாள்கோவில் மேலவிதி சாலையினை நெடுஞ்சாலைதுறையிடம் ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கிறது.. |

பொருள் எண் 36

இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள கணினி சாதனங்களுக்கு தேவையான உபகரணங்கள் வாங்கி கொள்ளவும், பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் பிரிண்டர் சாதனங்களை வருடாந்திர பராமரிப்பு செய்திடவும், தகவல் தொழில்நுட்ப பணிக்கு பெறப்பட்டுள்ள இன்டர்நெட் மற்றும் LAN Connectivity முதலிய இணைப்புகளுக்கு வருடாந்திர கட்டணம் செலுத்துவதற்குண்டான செலவினங்களை 2022-23ம் ஆண்டிற்கு கீழ்கண்ட தலைப்புகள்வாரியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | தலைப்புவாரியான விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | தற்போது பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் ஜெராக்ஸ் சாதனங்களுக்குண்டானஉபகரணங்கள்வாங்குதல் தொடர்பாக | ரூ.300000/- |
| 2 | தற்போது பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் பிரிண்டர் சாதனங்களை ஆண்டு பராமரிப்பு செய்தல் (AMC) மற்றும் இதர பணிகள் | ரூ.200000/- |
| 3 | தகவல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்த இணையதளம், Broad Band & VPN Connectivity க்கான கட்டணங்கள் செலுத்துதல். | ரூ.500000/- |
| 4 | கூடுதலாக கணினி மற்றும் பிரிண்டர்கள் புதியதாக வாங்குதல் மற்றும் இதர பொருட்கள் வாங்குதல் | ரூ.500000/- |
| | ஆக மொத்தம் | ரூ.1500000/- |

**அலுவலக குறிப்பு** :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2022-23ம் ஆண்டிற்கு தேவையான கணினி உபகரணங்கள் வாங்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப் பணி அடிப்படையில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. மேலும் மேற்காணும் கணினி செயல்பாட்டிற்கு திட்டப்பணிகளில் நிதிஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் திட்டநிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 929/2022/இ1

83) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்37

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள கசிவுகளை சீர் செய்யும் பணியினை மேற்கொள்ள 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரர் 16,பஜனைமடத்தெரு திருவாரூர். | ரூ.845345/- | ரூ.844920/- | 0.05% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.கே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர், துர்காலயா ரோடு, | | ரூ.849200/- | 0.46%சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்காணும் திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு,எஸ்.தணிகாசலம் என்பவரின் 0.05% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவாக அளித்துள்ள ஒப்பந்த புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

84) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

Created with
PDFBear.com

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்,<br>ந.க.எண்.847/2022/இ1 | |
| பொருள் எண்38<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்காக ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள இந்தியா மார்க்-II பம்புகள், சிறுமின்விசைப்பம்புகள், தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள ஆழ்துளை நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கங்களில் அமைந்துள்ள மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணியினை மேற்கொள்ள 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.அதன் விவரம் பின்வருமாறு | 85)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்ததாரர் 16,பஜனைமடத்தெரு திருவாரூர். | ரூ.835855/- | ரூ.834876/- | 0.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.கே.செந்தில்குமார் ஒப்பந்ததாரர், துர்காலயா ரோடு, திருவாரூர். | | ரூ.840613/- | 0.57% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

| | |
|---|---|
| மேற்காணும் திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு,எஸ்.தணிகாசலம் என்பவரின் 0.12% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவாக அளித்துள்ள ஒப்பந்த புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்,<br>ந.க.எண்.846/2022/இ1 | |
| பொருள் எண் 39<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தாழை. மூ.கருணாநிதி வணிக வளாகம் மிகவும் பழுதடைந்து உபயோகப்படுத்தாத நிலையில் உள்ள கட்டிடத்தினை 20.12.2018 அன்று இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் பின்புறத்தில் உள்ள மிகவும் மோசமான உபயோகமற்ற நிலையில் உள்ள இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு பொது ஏலம் கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**:-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4127/2018/இ1 | 87)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண் 40<br>திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள கட்டிடத்தின் சிரத்தன்மையினை குறித்து திருச்சி தேசிய தொழில் நுட்ப கழகம் பொறியாளர்கள் நேரடியாக ஆய்வு செய்து, மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட தெரிவித்து ஆய்வு அறிக்கை வழங்கியுள்ளனர். எனவே மேற்படி ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மேற்காணும் பழைய உபயோகமற்ற நிலையில் உள்ள அலுவலக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ளுவதற்கு பொது ஏலம் கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>தேசிய தொழில்நுட்ப கழக ஆய்வு அறிக்கையின்படி மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4127/2018/இ1 | 88)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

இடம் : திருவாரூர்
நாள் : 06-05-2022

செ.புவனப்பிரியா
நகர மன்ற தலைவர்,
திருவாரூர்நகராட்சி.

Created with
PDFBear.com

ஸ்ரீ சுபகிருது ஆண்டு (வைகாசி 11) 2022 மே 25-ம் தேதி
புதன்கிழமை காலை 11.00 மணிக்கு
திருவாரூர் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது
கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்
முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா, நகரமன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் 01<br>சொத்துவரி , காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண் 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நிதி 4) நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில் சொத்துவரி , காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட நகர்மன்ற 11.04.2022 தேதிய 44-ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபனைகள் ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ, இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் தினத்தந்தி (13.04.2022), தினகரன் (13.04.2022), ஆகிய தினசரி செய்தி தாள்களிலும் (சதர்ன் மெயில்) 13.04.2022 ஆங்கில நாளிதழிலும் அலுவலக விளம்பர பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் பொதுமக்கள் சொத்துவரி உரிமையாளர்களிமிருந்து ஆட்சேபனைகள், ஆலோசனைகள் ஏதும் வரப்படவில்லை. எனவே நகரமன்ற 11.04.2022-ம் தேதி 44 எண் தீர்மானத்தின் 2022-23 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டு முதல் (01.04.2022) சொத்துவரி சீராய்வு செய்ய உறுதி செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>ந.க.எண் 763/2022/அ1 | 89) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

செ.புவனப்பிரியா
நகர மன்ற தலைவர்,
திருவாரூர்நகராட்சி.

இடம் : திருவாரூர்
நாள் : 25-05-2022

Created with
PDFBear.com